**<u>பட்டியல் 1</u>**

**இடைநிலை / மேல்நிலை முதலாமாண்டு / இரண்டாமாண்டு பொதுத் தேர்வெழுதும் மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் விவரம்**

| வ.எண் | குறைபாட்டின் தன்மை | வழங்கப்படும் சலுகைகள் |
|---|---|---|
| 1. | கண் பார்வையற்றோர் | 1. தேர்வெழுத சொல்வதை எழுதுபவர் நியமனம்.<br>2. தேர்வெழுத கூடுதல் 1 மணிநேரம். |
| 2. | காது கேளாத மற்றும் வாய் பேச இயலாதோர் | 1. இரு மொழிப் பாடங்களில் ஏதேனும் ஒரு மொழிப்பாடம் தேர்வு எழுத விலக்கு அளித்தல்.<br>2. தேர்வெழுத கூடுதல் 1 மணிநேரம். |
| 3. | எதிர்பாராத விபத்துக்களால் உடல் ஊனமுற்று தேர்வு எழுத இயலாதோர் பாரிச வாயு போன்ற நோயால் பாதிக்கப்பட்டோர் மற்றும் எதிர்பாராத விபத்தினால் கைமுறிவு ஏற்பட்டோர். | 1. தேர்வெழுத சொல்வதை எழுதுபவர் நியமனம்.<br>2. தேர்வெழுத கூடுதல் 1 மணிநேரம். |
| 4. | மனநலம் குன்றியோர் | 1. இருமொழிப் பாடங்களில் ஏதேனும் ஒரு மொழிப் பாடம் தேர்வு எழுத விலக்கு அளித்தல்.<br>2. தேர்வெழுத கூடுதல் 1 மணிநேரம்<br>3. தேர்வெழுத சொல்வதை எழுதுபவர் நியமனம். |
| 5. | டிஸ்லெக்சியா குறைபாடு | 1. தேர்வெழுத கூடுதல் 1 மணி நேரம்<br>2. கால்குலேட்டர் பயன்படுத்த அனுமதி.<br>3. கிளார்க் அட்டவணை பயன்படுத்த அனுமதி.<br>4. கேள்வித்தாளை படித்துக்காட்ட அல்லது செல்வதை எழுத ஆசிரியரை நியமிக்க அனுமதி (இரண்டில் ஏதேனும் ஒரு சலுகை அன்னாரின் கோரிகை படி).<br>5. ஏதேனும் ஒரு மொழிப்பாடம் எழுதுவதிலிருந்து தவிர்ப்பு வழங்குதல்.<br>6. மொழி அல்லாத பிற பாடங்களை திருத்தும் போது எழுத்து பிழைக்கென மதிப்பெண் குறைக்காமல் பாடப் பொருளை மட்டும் கணக்கில் கொண்டு மதிப்பெண் அளித்தல்.<br>7. பள்ளியில் முறையாக பயின்றோ அல்லது பள்ளியில் முறையாக பயிலாமல் தனிப்பட்ட முறையில் ஆசிரியரிடம் சிறப்பு பயிற்சி பெற்ற தனித் தேர்வராக பொதுத் தேர்வு எழுத அனுமதித்தல். |

| | | |
|---|---|---|
| 6. | நரம்பியல் கோளாறு | 1. தேர்வெழுத கூடுதல் 1 மணி நேரம்.<br>2. கால்குலேட்டர் பயன்படுத்த அனுமதி.<br>3. கிளார்க் அட்டவணை பயன்படுத்த அனுமதி.<br>4. கேள்வித்தாளை படித்துக்காட்ட அல்லது செல்வதை எழுத ஆசிரியரை நியமிக்க அனுமதி (இரண்டில் ஏதேனும் ஒரு சலுகை அன்னாரின் கோரிகை படி).<br>5. ஏதேனும் ஒரு மொழிப்பாடம் எழுதுவதிலிருந்து தவிர்ப்பு வழங்குதல்.<br>6. மொழி அல்லாத பிற பாடங்களை திருத்தும் போது எழுத்து பிழைக்கென மதிப்பெண் குறைக்காமல் பாடப் பொருளை மட்டும் கணக்கில் கொண்டு மதிப்பெண் அளித்தல்.<br>7. பள்ளியில் முறையாக பயின்றோ அல்லது பள்ளியில் முறையாக பயிலாமல் தனிப்பட்ட முறையில் ஆசிரியரிடம் சிறப்பு பயிற்சி பெற்ற தனித் தேர்வராக பொதுத் தேர்வு எழுத அனுமதித்தல்.<br>8. கணினி மற்றும் வரைபடம் பயன்படுத்த அனுமதித்தல். |

<u>குறிப்பு</u>

இடைநிலை பொதுத் தேர்வெழுதும் மாற்றுத் திறனாளி தேர்வர்கள் மட்டும் அறிவியல் பாட செய்முறைத் தேர்வு விலக்கு கோரலாம்.